**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No.513/2021**
**வழக்கு சாட்சி PW–10**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஷேக் சுலைமான் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | கலந்தர் | தொழில் | : | சீ.சீ.டி.வி |
| கிராமம் | : | தென்காசி | வயது | : | 39 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of September 23rd, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தென்காசியில் குடியிருந்து வருகிறேன். நான் சீ.சீ.டி.வி கேமரா வைக்கும் தொழில் செய்து வருகிறேன். 13.09.2020 ம் தேதி, தென்காசி போலீசார் என்னை ஆசாத் நகர், கோட்டை மாடன் தெருவில் உள்ள இராமைய்யா என்பவரின் வீட்டிற்கு என்னை அழைத்து சென்றார்கள். அங்கிருந்த சீ.சீ.டீ.வி கேமராவில் உள்ள பதிவுகளை 12.00 மணியிலிருந்து 02.00 மணி வரை CD யில் காப்பி செய்து போலீசாரிடம் கொடுத்தேன். அந்த CD – **அ.சா.பொ.1** ஆகும். 65 பி சான்று ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த 65 பி சான்று – **அ.சா.ஆ.8** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

நான் CCTV பதிவு செய்யும் போது, இராமைய்யா அங்கிருந்தாரா? என்றால் இருந்தார். CCTV பதிவில் என்ன இருந்தது என்று தற்போது என்னால் சொல்ல முடியாது. நான் அந்த பதிவை எடுத்து போலீசாரிடம் கொடுத்தேன். போலீசார் என்னை விசாரிக்கும் போது முதல்விசாரணையில்

சொல்லியுள்ளவாறு தான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் CCTV பதிவுகளை எடுத்துக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 க்கு ஆதரவாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.09.24 14:45:10 +0530